# கடற்கரை கவியரங்கு– 663

## நாள்: 05-07-2026

## காற்று!

கிழக்கென்றும் மேற்கென்றும், திசைகூறி
கீழ்திசையே தான்தானென்று நாளும்;
வழக்குரைக்கும் மாந்தருக்கும் உதவிடவே,
தழைந்திடும் பூமியிதில் தாவரங்கள்!

பிழையின்றி உயிரினங்கள் வாழ்வதற்கு;
மழைகொண்டு வந்து தருவதுவும்,
அலையோசை கடற்கரையில் அழகூட்ட,
அருமையாய் நாம்வாழ காற்றேயாம்!

பெரும்புயலாய் வந்திங்கு நமக்கு,
வேதனைகள் தந்தே நின்றாலும்;
மனமுவந்து உடல்சோர்வு நீக்கிடும்,
தனவந்தன் தென்றல் காற்றுதானே!

வனந்தன்னில் வாழ்ந்து உயிர்க்காற்றை,
மனிதம் முதலாய் உயிர்கட்கு வழங்கும்!
சினம் கொண்டு சிலநேரம் நின்றால்,
பிணமாகும் மாந்தர்முதல் யாவுமே!

நுகர்ச்சியிலே செயல்வீரன் அவனே!
நூதனமாய் சுவைபல அறிந்திடவும்,
நாதம் கொண்டு நாவினிலே தாளமிட,
பேதமின்றி உமிழ்நீரும் பிறப்பெடுக்க,

பிறழ்வின்றி மனம்தேடும் அச்சுவையை!
அறம்கொண்ட வாழ்விலே முத்தாரமாய்,
அணைத்துக் காக்கும் காற்றேதான்,
ஐம்பொருளில் ஒன்றாகி ஆளுந்தானே!

- **கவிஞர் கவிவளவன்.**

05-07-2026